Singapore Book Council
Powering Our Imagination

# சிங்கப்பூர் இலக்கியப் பரிசு 2026
# விதிமுறைகளும் நிபந்தனைகளும்

2026 新加坡文学奖

2026 Singapore Literature Prize

2026 Hadiah Sastera Singapura

2026 சிங்கப்பூர் இலக்கியப் பரிசு

சிங்கப்பூர் இலக்கியப் பரிசு 1992-ல் தொடங்கப்பட்டது. சிங்கப்பூரின் ஆகச் சிறந்த இலக்கியப் பரிசான இதனை நூற்று- எழுபதுக்கும் அதிகமான எழுத்தாளர்கள் இதுவரை பெற்றுள்ளனர். ஈராண்டுக்கு ஒருமுறை இந்தப் போட்டி நடைபெற்று வருகிறது. சிங்கப்பூரிலும் வெளிநாட்டிலும் ஒரு குறிப்பிட்ட காலக்கட்டத்தில் சிங்கப்பூர் குடிமக்களாலும் நிரந்தரவாசிகளாலும் எழுதி வெளியிடப்பட்ட புனைவு/படைப்பாக்க அபுனைவு மற்றும் கவிதை ஆகியவவை இப்போட்டிக்கு அனுப்பப்படலாம். உலகிலுள்ள மிகச்சில பன்மொழி இலக்கியப் பரிசுகளில் சிங்கப்பூர் இலக்கியப் பரிசும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

போட்டியின் பரிசுப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் வெற்றியாளருக்கு S$5,000 வெள்ளி பரிசாக வழங்கப்படும். அதனுடன் வெற்றியாளர்களுக்கு சிறப்பு பரிசுக் கோப்பையும் வழங்கப்படும்.

**1.** பரிசுப் பிரிவு

**(a)** இந்த விருது சிங்கப்பூர் குடிமக்களாலும் நிரந்தரவாசிகளாலும் எழுதி வெளியிடப்பட்ட புனைவு/படைப்பாக்க அபுனைவு மற்றும் கவிதை ஆகியவற்றின் எந்தவொரு படைப்புக்கும் திறந்திருக்கும். 1 ஜனவரி 2024 முதல் 31 டிசம்பர் 2025 வரை புத்தக வடிவில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டிருக்க வேண்டும். அனைத்து புத்தகங்களும் சிங்கப்பூரிலோ அல்லது வெளிநாட்டிலோ அச்சிடப்பட்ட புத்தக வடிவில் வெளியிடப்பட வேண்டும்.

**(b)** சிறார்கள் ஆகியவர்களுக்காக எழுதப்பட்டப் படைப்புகளை சிங்கப்பூர் இலக்கியப் பரிசு போட்டி ஏற்காது.

**(c)** 8 பிரிவுகள்

- புனைவு/படைப்பாக்க அபுனைவு (சீனம், ஆங்கிலம், மலாய், தமிழ்)
- கவிதை (சீனம்,ஆங்கிலம், மலாய், தமிழ்)

**(d)** போட்டிக்கு அனுப்பப்படும் படைப்புகள் எந்த தலைப்பிலும் அல்லது கருப்பொருளிலும் இருக்கலாம்.

**(e)** புனைவு/படைப்பாக்க அபுனைவு - பிரிவில் புனைகதை மற்றும் படைப்பூக்கமிக்க அபுனைவு எழுத்துகள் ஆகிய இரண்டும் அடங்கும். புனைகதை என்பது கதை சொல்லும் உரைநடையை குறிக்கும்; இதில் சிறுகதைகள் மற்றும் நாவல்கள் அடங்கும். இந்த விருதின் தொடர்பில், படைப்பாக்க அம்ச அபுனைவு என்பதை உண்மையான நிகழ்வுகள், மனிதர்கள் அல்லது கருத்துகளைக் கொண்டு இலக்கிய நடையைப் பயன்படுத்தி உருவாக்கும் கதை இலக்கியம் என நாங்கள் வரையறுக்கிறோம். இத்தகைய இலக்கிய நடையின் எடுத்துக்காட்டுகளில், இலக்கிய விமர்சனம், வாழ்க்கை வரலாறு, வாழ்க்கைக்குறிப்புகள், தனிநபர் கட்டுரைகள், பயணக் கட்டுரைகள் ஆகியவை அடங்கும். ஆனால், சமையல் புத்தகங்கள், சுய உதவிக் கையேடுகள், பயண வழிகாட்டி நூல்கள், கல்வி நூல்கள், தொழில் நூல்கள், கருத்துரைகள் அல்லது பாடப் புத்தகங்கள் ஆகியன ஏற்கப்படமாட்டா. பொதுமக்கள் படிப்பதற்குக் கிடைக்கக்கூடியவையாகப் படைப்பு இருப்பதுடன், சிறப்புப்பிரிவினர் அல்லது கல்வித்துறை சார்ந்த வாசகர்களுக்காக இருக்கக்கூடாது. இளம் வயது வாசகர்களுக்கான (YA) படைப்புகள் சமர்ப்பிப்பதற்குத் தகுதியானவை.

**(f)** கவிதை என்பது யாப்பு படைப்புகளைக் குறிக்கிறது.

**2.** மொழி

(a) புனைவு/படைப்பாக்க அபுனைவு மற்றும் கவிதை ரிவுகளில் சமர்ப்பிக்கப்படும் படைப்புகள் சிங்கப்பூரின் நான்கு அதிகாரப்பூர்வ மொழிகளான சீனம், ஆங்கிலம், மலாய், தமிழ் ஏதேனும் ஒன்றில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**3.** தகுதி

(a) விண்ணப்பம் செய்யும் சமயத்தில் குறைந்தது 18 வயது நிரம்பிய சிங்கப்பூரர்கள் மற்றும் நிரந்தரவாசிகள் போட்டியில் பங்கெடுக்கலாம்.

(b) ஒவ்வொரு படைப்பும் அனுப்புபவரால் எழுதப்பட்ட அசல் படைப்பாக இருக்க வேண்டும்.

(c) வகைகளுக்கு, படைப்புகள் 1 ஜனவரி 2024 முதல் 31 டிசம்பர் 2025 வரை வெளியீடு கண்டிருக்க வேண்டும்.

(d) இரண்டுக்கும் மேற்பட்ட படைப்பாளிகளின் சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் அல்லது வரைகதை / வரைகலை நாவல் இந்த விருதுக்கு தகுதியற்றவை.

(e) பதிப்பிக்கப்பட்ட படைப்புகள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தகுதி பெற, படைப்புகள் இயற்பியல் நூல் வடிவத்தில் பதிப்பிக்கப்பட்டு வர்த்தக அடிப்படையில் வெளியிடப்படுவதற்குத் தயாராக இருக்கவேண்டும். மின்-புத்தகங்கள் மற்றும் கேட்பொலி (ஆடியோ) புத்தகங்கள் தற்போது விருதுக்குத் தகுதியற்றவையாகும்.

(f) இதற்கு முன்னர் செய்தித்தாள்கள், சஞ்சிகைகள் அல்லது இணையத்தளங்கள் ஆகியவற்றில் பதிப்பிக்கப்பட்ட சிறுகதைகள், கவிதைகள் கட்டுரைகள் அல்லது வரைகதைகள் ஆகியவற்றின் நூல் வடிவிலான திரட்டுகள் தகுதி பெறுபவையாகக் கருதப்படும். ஆனால், அந்த நூல் வரையறுக்கப்பட்ட காலக்கட்டத்தில் (குறிப்பு 3இ பார்க்கவும்) வெளியிடப்பட்டிருக்க வேண்டும்.

(g) சாப் புக், துண்டுப் பிரசுரங்கள், சிறு புத்தகங்கள், இதழ்கள் மற்றும் பிற சுருக்க வடிவ அல்லது தரமற்ற வெளியீடுகள் தகுதி பெறாது. சமர்ப்பிக்கப்படும்

அனைத்து படைப்புகளும் தத்தமது பிரிவுகளுக்கான தகுதிகளை பூர்த்தி செய்யும் முழுநீள வெளியிடப்பட்ட படைப்புகளாக இருக்க வேண்டும்.

(h) மறுபதிப்புகள், முந்தைய ஆண்டுகளிலிருந்து புதுப்பிக்கப்பட்ட பதிப்புகள் அல்லது மறு வெளியீடுகள் ஆகியவை போட்டிக்குத் தகுதியற்றவையாகும்.

(i) முன்னர் புத்தக வடிவில் வெளியிடப்பட்ட படைப்புகளும்“சிறந்த தொகுப்புகளும்” தகுதி பெறமாட்டவை. ஆனால், திரட்டிலுள்ள படைப்புகளில் குறைந்தது 80% முதல்முறையாக நூல் வடிவில் பதிப்பிக்கப்பட்டால், அந்த நூல் சிங்கப்பூர் இலக்கியப் பரிசு போட்டிக்குத் தகுதி பெறும்.

(j) சமர்ப்பிப்புச் சுழற்சியை நாங்கள் மறுஆய்வு செய்யும் வரை, SLP 2026-ல் மொழிபெயர்ப்புப் பிரிவு சேர்க்கப்படாது. எனவே, சிங்கப்பூர் இலக்கியப் பரிசின் அடுத்த தகுதிவாய்ந்த பதிப்பில் மொழிபெயர்ப்புப் பிரிவு திறக்கப்படும்போது ஆங்கில மொழிபெயர்ப்புகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மொழிபெயர்ப்புப் பிரிவுக்கான விருது அடுத்த முறை வழங்கப்படும்போது, தகுதித் தேவைகளுக்கு உட்பட்டு, சீன, மலாய் அல்லது தமிழ் மொழிகளிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழிபெயர்க்கப்பட்ட, கடந்த கால SLP விருது வென்ற படைப்புகளையும் சமர்ப்பிக்கலாம்.

(k) சமர்ப்பிப்புச் சுழற்சியை நாங்கள் மறுஆய்வு செய்யும் வரை, SLP 2026-ல் காமிக்ஸ்/கிரா.ஃபிக் நாவல்ப் பிரிவு சேர்க்கப்படாது. எனவே, காமிக்ஸ் அல்லது வரைகலைப் புதினங்கள் ஏதேனும் இருப்பின், சிங்கப்பூர் இலக்கியப் பரிசின் (SLP) அடுத்த தகுதிவாய்ந்த பதிப்பில், காமிக்ஸ்/வரைகலைப் புதினப் பிரிவு திறக்கப்படும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

**4.** படைப்புகளின் சமர்ப்பிப்பு

(a) ஒருவர் ஒரு படைப்புக்கு மேல் போட்டிக்கு அனுப்பி வைக்கலாம். ஆனால், அத்தகைய படைப்புகள் வெவ்வேறு படைப்புகளாக இருக்கவேண்டுமே தவிர, ஒரே படைப்பின் மாற்றுருவங்களாக இருக்கக்கூடாது.

(b) தொடர்புடைய படைப்புகள் அனைத்தும் ஒரே படைப்பு என்று கருத்தப்படும். அவை போட்டிக்குத் தகுதி பெறாது.

(c) இந்த விருது காலத்தின்போது ஒரே படைப்பு ஒரு மொழிக்கு மேற்பட்ட மொழிகளில் சமர்ப்பிக்கப்படக்கூடாது.

(d) படைப்புகளை எழுத்தாளர், பதிப்பாளர், முகவர் அல்லது எழுத்தாளர் குழுவின் ஓர் அங்கத்தினர் சமர்பிக்கலாம்.

**5.** மதிப்பீடு

(a) ஒவ்வொரு பிரிவுக்கும் மூவர் அடங்கிய நடுவர் குழு இருக்கும். அதில் ஒரு தலைமை நடுவரும் இரண்டு சக நடுவர்களும் உள்ளடங்கி இருப்பர்.

(b) நடுவர்களின் தீர்ப்பு இறுதியானது. அது எல்லோரையும் கட்டுப்படுத்தக்கூடியது. நடுவர்களின் முடிவு குறித்து எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**6.** இறுதி நாள்**.**

**(a)** போட்டிக்குப் படைப்புகளை அனுப்ப வேண்டிய இறுதி நாள், **15**ஆம் தேதி மே மாதம், **2026 (**வெள்ளிக்கிழமை**),** மாலை **6** மணியாகும் **(**சிங்கப்பூர் நேரப்படி**).**

**(b)** ஒவ்வொரு முழுமையான சமர்ப்பிப்பும் ஒரு (1) இலக்கமுறை பிரதி மற்றும் நான்கு (4) இயற்பியல் பிரதிகளுடன் இருக்க வேண்டும், அவை காலக்கெடுவிற்குள் எஸ்பிசி அலுவலகத்திற்கு வழங்கப்பட வேண்டும்.

**(c)** இணையவழிப் படிவத்தைச் சமர்ப்பிக்கும்போது, ஒரு புத்தகத்திற்கு S$20 சமர்ப்பிப்புக் கட்டணம் வசூலிக்கப்படும்.

**(d)** தாமதமாக அனுப்பப்படும் விண்ணப்பங்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்படாது.

**7.** பரிசு

(a) போட்டியின் பரிசுப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் வெற்றியாளருக்கு S$5,000 வெள்ளி பரிசாக வழங்கப்படும். அதனுடன் வெற்றியாளர்களுக்கு சிறப்பு பரிசுக் கோப்பையும் வழங்கப்படும்.

(b) போட்டியின் ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு வெற்றியாளருக்கு மட்டுமே நீதிபதிகள் பரிசு வழங்குவர். சமர்ப்பிக்கப்பட்ட படைப்புகளில் ஒன்றுகூட விருதுக்குத் தகுதி பெறாவிட்டால், யாரையும் வெற்றியாளாராக நடுவர்கள் அறிவிக்க மாட்டார்கள்.

**8.** இறுதி பரிசீலனைக்கான பட்டியல்

(a) சிங்கப்பூர் இலக்கியப் பரிசுக்காக இறுதி பரிசீலனைக்குத் தெரிவான படைப்புகளின் பட்டியல் 2026 அக்டோபர் நடுப்பகுதி மாத மத்தியில் அறிவிக்கப்படும்.

(b) இறுதி பரிசீலனைக்குத் தெரிவான படைப்பாளர்களுக்கு மட்டுமே தகவல் தெரிவிக்கப்படும்.

**9.** வெற்றியாளர்கள் பற்றிய அறிவிப்பு

(a) சிங்கப்பூர் இலக்கியப் பரிசு 2024 பரிசளிப்பு நிகழ்ச்சி, டிசம்பர் 2026 தொடக்கத்தில்.

(b) விருது வழங்கும் விழாவில் வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுவார்கள்.

(c) வெற்றியாளர்கள் யாவர் என்பது பரிசளிப்பு விழாவிற்கு முன் அறிவிக்கப்படமாட்டாது. இறுதி பரிசீலனைக்குத் தெரிவான அனைத்து படைப்பாளர்களும் விழாவிற்கு அழைக்கப்படுவர். ஏதேனும் ஒரு காரணத்திற்காக அவர்களால் வர இயலாமல் போனால், அவர்களின் சார்பில் கலந்துகொள்ள ஒரு பிரதிநிதியை அவர்கள் முன்மொழிய வேண்டும். அப்படி அவர்களுக்குப் பரிசு கிடைத்தால் அவர்களின் சார்பில் பிரதிநிதி பரிசுகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(d) பரிசளிப்பு விழாவிற்கு முன்பாக வெற்றியாளர்கள் யாவர் என்பதைப் பற்றி கேட்கப்படும் வினாக்களுக்கு எவ்வித பதிலும் அளிக்கப்படாது.

**10.** மக்களை எட்டும் முயற்சிகளும் விளம்பரமும்

(a) இறுதிப் பரிசீலனைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் வெற்றி பெற்ற படைப்பாளர்களும் பொது உரைகள் ஆற்றவும் பயிலரங்குகள் நடத்தவும் மேலும்/அல்லது எழுத வழிகாட்டும் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளவும் அழைக்கப்படுவர். (பொருந்தக்கூடிய இடங்களில்)

(b) இறுதிப் பரீசிலனைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களும் வெற்றி பெற்ற படைப்பாளர்களும் ஊடகத் துறையினரிடம் பேச அழைப்பு விடுக்கப்படும். ஊடக நிகழ்ச்சிகளிலும் அவர்கள் பங்கேடுக்க வேண்டும். சிங்கப்பூர் இலக்கியப்

பரிசு தொடர்பில் புத்தக மன்றம் மேற்கொள்ளும் விளம்பர முயற்சிகள் அனைத்திற்கும் ஆதரவு தரவும் வேண்டும். (பொருந்தக்கூடிய இடங்களில்)

(c) எழுத்தாளர் புத்தகத்தின் முன்பக்க அட்டை ஆகியவற்றின் சமர்ப்பிக்கப்பட்ட புகைப்படங்கள், விளம்பர முயற்சிகளுக்குப் பயன்படுத்தப்படலாம்.

**11.** சமர்ப்பிக்கும் முறை

(a) அனைத்து விண்ணப்பங்களும் இணையம்வழி சமர்ப்பிக்கப்படவேண்டும். அன்புகூர்ந்து https://www.bookcouncil.sg/awards/slp-2026 இணையப்பக்கத்தை நாடுங்கள்.

(b) அனைத்து உள்ளீடுகளும் உங்கள் புத்தகத்தின் நான்கு (4) இயற்பியல் பிரதிகள் மற்றும் ஒரு (1) இலக்கமுறை பிரதி (PDF வடிவத்தில்) உடன் இருக்க வேண்டும். நீதிபதிகளின் வசதிக்காக, வாட்டர்மார்க்குகள் இல்லாத புத்தக கோப்பை பதிவேற்றவும். ஒவ்வொரு புத்தகக் கோப்பும் புக் கவுன்சில் குழுவிற்கும் விருது நீதிபதிகளுக்கும் இடையில் ரகசியமாக வைக்கப்படும் ஒவ்வொரு முழுமையான சமர்ப்பிப்பும் புத்தகத்தின் நான்கு (4) இயற்பியல் பிரதிகளுடன் இருக்க வேண்டும், அவை காலக்கெடுவிற்குள் எஸ்பிசி அலுவலகத்திற்கு வழங்கப்பட வேண்டும் (புள்ளி 6 ஐப் பார்க்கவும்). தாமதமான அல்லது முழுமையற்ற சமர்ப்பிப்புகள் தகுதி நீக்கம் செய்யப்படும்.

(c) விண்ணப்பத்தை சமர்ப்பித்தவர்களுக்கு, விண்ணப்பம் கிடைத்ததை உறுதி செய்யும் மின்மடல் அனுப்பப்படும். அந்த மின்மடலை அச்சிட்டு, அதனுடன் நான்கு (4) இயற்பியல் புத்தகப் பிரதிகளை இணைத்து அனுப்பவேண்டும்.

(d) இணையம்வழி விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதற்கு, பின்வருபவற்றைத் தயார்ப்படுத்திக் கொள்ளுங்கள்:

(1) நுழைவுப் படிவத்திற்குத் தேவையான சுய விவரங்கள்;

(2) எழுத்தாளரைப் பற்றிய சுயவிவரம் (80 சொற்களுக்கு மேற்போகக்கூடாது; ஆங்கிலத்திலும் தாய்மொழியிலும் எழுதப்பட வேண்டும்)

(3) எழுத்தாளரின் புகைப்படம் (JPG; குறைந்தது 300dpi at 1MB தெளிவுடன் இருக்க வேண்டும், கைகளில் எந்தப் பொருளும் இல்லாமல் வெள்ளை

அல்லது நிறமற்ற பின்னணியில் மட்டுமே இடம்பெறும் புகைப்படமாக இருக்க வேண்டும்)

(4) புத்தகத்தின் அட்டைப்படம் (JPG; குறைந்தது 300dpi at 1MB);

(5) புத்தகத்தைப் பற்றிய சிறு விளக்கம் அல்லது சுருக்கம் (150 சொற்களுக்கு மேற்போகக்கூடாது;

(6) வெளியீட்டு விவரங்கள் (ISBN மற்றும் வெளியீட்டாளர் தொடர்பு விவரங்கள்)

(7) வாட்டர்மார்க்குகள் இல்லாத வெளியீட்டின் மின்னிலக்க பிரதி

(8) ஒரு புத்தகத்திற்கு சமர்ப்பிப்புக் கட்டணம் S$20

(e) படிவங்களுடன் இயற்பியல் புத்தகப் பிரதிகள் இணைத்து அனுப்பப்படாத விண்ணப்பங்கள் முழுமையற்றவையாகக் கருதப்பட்டு, போட்டிக்குத் தகுதி பெறாமல் போக நேரிடலாம்.

(f) சமர்ப்பிப்புக்கான இறுதி நாள் **15ஆம் தேதி மே மாதம், 2026 (வெள்ளிக்கிழமை), மாலை 6 மணியாகும் (சிங்கப்பூர் நேரப்படி).**

(g) புத்தகங்களை ஏற்பதற்காக, சிங்கப்பூர் புத்தக மன்றம் பின்வரும் நாட்கள் மற்றும் நேரங்களில் திறந்திருக்கும். அன்புகூர்ந்து, இதற்கேற்ப அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யுங்கள்.

- திங்கள் - வெள்ளி, காலை 10.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை (பொது விடுமுறை நாட்கள் தவிர).

(h) எங்கள் முகவரி:

Singapore Book Council
Goodman Arts Centre Blk E #03-32
90 Goodman Road Singapore 439053
ATTN: SLP 2026
(மின்தூக்கி இல்லை என்பதை நினைவில் கொள்ளவும்)

**12.** போட்டிக்கு சமர்ப்பிக்கப்படும் புத்தகங்கள்

(a) அனுப்பி வைக்கப்படும் படைப்புகள் ஏதேனும் இடைவழியில் காணாமல் போனால் அல்லது சேதமடைந்தால் அதற்கு ஏற்பாட்டாளர்கள் பொறுப்பேற்கமாட்டார்கள்.

Singapore Book Council
Powering Our Imagination

(b) சிங்கப்பூர் இலக்கியப் பரிசுக்காக சமர்ப்பிக்கப்படும் புத்தகங்களை புத்தக மன்றம் தன்வசம் வைத்துக்கொள்வதுடன் அவற்றைத் திரும்பத் தராது.

**13.** முக்கிய தேதிகள்

| | |
|---|---|
| 15 மே 2026,<br>மாலை 6 மணி | சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் |
| அக்டோபர் நடுப்பகுதி 2026 | இறுதிப் பரிசீலனைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளும் படைப்பாளர்களும் பற்றிய அறிவிப்பு |
| டிசம்பர் தொடக்கத்தில் 2026 | சிங்கப்பூர் இலக்கியப் பரிசு 2026 பரிசளிப்பு நிகழ்ச்சி. இறுதிப் பரிசீலனைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புகளும் படைப்பாளர்களும் பற்றிய அறிவிப்பு |

**14.** தொடர்பு விவரம்
ஏதேனும் விவரங்கள் கேட்டறிய, programmes@bookcouncil.sg முகவரிக்கு மின்னஞ்சல் அனுப்புங்கள்.